

சிவகங்கை மாவட்டம் வாணியன்குடி ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு ஒரே நாளில் 1லட்சத்து100மரக்கன்றுகள் நடும் பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் வானியன்குடிஊராட்சி மன்றத்தலைவர் திருமதி புவனேஸ்வரிசுரேஸ்குமார் ,திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன்உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன் கருதி ரூ.1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் இரண்டு நிரந்தர மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில் 16.02.2024 அன்று இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியம், பசும்பொன்னில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், முன்னிலையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் , ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழிசெல்வராஜ் , இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, ஆகியோர் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

### கிராமப்புற மக்கள் முன்னேற்றம் அடைய

# ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன!

## சிவகங்கையில் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, பிப். 27 -

கிராமப்புற மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என அமைச்சர் கேஆர்.பெரியருப்பன் பேசினார்.

சிவகங்கையில் நடைபெற்றபல்வேறு நிகழ்ச்சியில் ரூ.1.85கோடியில் கட்டப்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு ரூ.4லட்சம் மதிப்பிலான புத்தகங்களை நகராட்சி நிர்வாகத்திடம் அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கினார்.

தொடர்ந்து சிவகங்கை அருகே வாணியங்குடி ஊராட்சி காட்டுக்குடியிருப்பு பகுதியில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 1லட்சத்து 100மரக்கன்றுகள் நடும் சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆஷாஅஜித் தலைமை வகித்தார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் மரக்கன்று நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் அரசின் நலத்திட்டங்கன் சிறப்பாக செயல்படுத்தப்படுவது மட்டுமன்றி, அனைத்து பகுதிகளிலும் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் பல்வேறு நிதியின் கீழ் வளர்ச்சி பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகர்ப்புறங்கள் மட்டுமின்றி கிராமப்புற மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நம் முதல்வர். தளபதி தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வீடு கட்டும் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மூலம் மருத்துவ வசதி உள்ளிட்டவை கிடைக்கும் வகையில் ஒவ்வொரு துறை ரீதியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கிராம மக்களின் பொருளாதாரம் உயர 100நாள் வேலைவாய்ப்பு திட்டம் மிக முக்கியமானது என்ற வகையில் அத்திட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. பெண்கள் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தால் உயர் கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், பேருந்துகளில் மகளீர் கட்டணம் இல்லாதது என பெண்கள் குறிப்பாக கிராமப்புற மக்கள் பயனடையும் திட்டங்கள் ஏராளமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ் புதல்வன் திட்டம் மூலம் உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களும் பயன்பெற உள்ளனர். மரங்கள் எண்ணிக்கை தேசிய அளவில் 33சதவீதமாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் சராசரி 27சதவீதமாக இருப்பதால் தேசிய சராசரியை எட்டவும் அதை விட கூடுதலாக நாம் மரம் வளர்க்கவும் மாவட்ட வாரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் சிவகங்கை மாவட்டம் முன்னோடியாக செயல்படவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசினார். இந்த நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆவின் பால் கூட்டுறவு சங்கத்தலைவர் த.சேங்கை மாறன், சிவகங்கை நகர்மன்றத்தலைவர் சி.எம்.துரைஆனந்த், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், நகராட்சி பொறியாளர் வர லெட்சுமி, வாணியன்குடி ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி புவனேஸ்வரிசுரேஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் கோவிந்தராஜ்ஒன்றியசெயலாளர்கள் எம். ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம், துணைச்செயலாளர் முத்துக்குமார்பொதுக்குழு உறுப்பினர் ஏ.இ.ஆர். சுரேஸ் குமார் மகளிரணி திலகவதி கண்ணன் மற்றும் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் கிராம மக்கள் கலந்துகொண்டார்கள்.

### நெல்லை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

# அம்பாசமுத்திரத்தில் “இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணைப் பிரச்சாரம்!

## இரா.ஆவுடையப்பன் - சிவராஜ் கருத்துரை வழங்கினர்!

நெல்லை, பிப். 27 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க “இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணை பிரச்சாரம் தொடக்க கருத்தரங்கம் நெல்லை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி திருமண மண்டபத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செய லாளர், அம்பை தொகுதி பார்வையாளர் சிவராஜ் கருத்துரை வழங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி. பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லிடைக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் இசக்கி பாண்டியன் வரவேற்றார். மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், அபுபக்கர், கணேசன், ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், முத்துப் பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன், பேரூர் கழகச் செயலாளர்கள் முத்து கணேசன், சுப்பையா, மனிஷா செல்வராஜ், மணிகண்டன், வானுமாமலை, வி.கே.புரம் நகர் மன்ற தலைவர் சுரேஷ் செல்வ பெருமாள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் அருண் தவசு பாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் பீர்முகமது, நெடுஞ்செழியன், பிரேம் ஆனந்த், பிரகாஷ் துணை அமைப்பாளர் ஆகாஷ், சார்பு அணி தலைவர்கள் ஜெயமாலதி, சுந்தர்ராஜன், முத்துராமலிங்கம், அண்ணாதுரை, கிங்ஸ்லி, அமானுல்லா, முத்துதுரை, அக்பர், ராமையா, கஸ்தூரி, மாயா சுரேஷ் உள்பட ஊரக, நகர்ப்புற, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.


